தலாவ பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலாவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தலாவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 484,375 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமையால் நடைமுறையல்லா முதலீடுகள் அப் பெறுமானத்தால் குறைவடைந்திருந்தது.	எதிர் வரும் கணக்கு கூற்றுக்களில் சரி செய்யப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய குறைவு ரூபா 10,046,358 ஆக இருக்க வேண்டிய போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு ரூபா 33,662,066 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதி ரூபா 43,708,424 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர் வரும் கணக்குக் கூற்றுக்களில் சரி செய்யப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 15,000,000 ஆக இருந்த போதிலும் ஆண்டிற்காக உள்ள படியாக அறவிடப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 16,331,751 ஆனமையால் 2024 ஆம் ஆண்டிற்காக சிட்டையிடப்பட்ட வருமானத்தை விஞ்சி கிடைக்கப் பெற்ற ரூபா 1,331,750 பெறுமதி திரண்ட நிதியத்திலும், பற்றாக்குறைக் கணக்கிலும் ரூபா 1,331,750 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது நீதிமன்றத் தண்டப்பணம் கிடைக்காது இருந்ததுடன் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டமையால் சிட்டையிடப்பட்ட வருமானம் ஆண்டின் வருமானம் ஆகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	பிரதேச சபைக்குரிய பஜிரோ வண்டி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	புதிய மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும்.	சபைக்குரிய சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(உ)	2019 ஆம் ஆண்டில் விபத்துக்கு உட்பட்டிருந்த கெப் வண்டி பழுது பார்க்கப்படாமல் தனியார் கராஜ் இல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுக் கிரயமான ரூபா 6,390,000 பெறுமதி மீளாய்வாண்டின் போதும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	விபத்து தொடர்பாக நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் பழுது பார்க்கப்பட்ட பின் புதிய மதிப்பீடு ஒன்றைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பு, காகிதாதிகள் களஞ்சிய இருப்பு, நீர் வேலை களஞ்சிய இருப்பு மற்றும் மின்சார களஞ்சிய இருப்பு மதிப்பீடு செய்யப்படாமல் கடந்த ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்ட இருப்பு மீதிகளின் கூட்டுப் பெறுமதியான ரூபா 3,241,460 ஆக மீளாய்வாண்டின போதும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பொருள் மெய்மையாய்வின் பின்னர் பௌதீக இருப்பு மீதியை இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(எ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் குறைவின் பெறுமதியான ரூபா 10,046,358 ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் குறைவாக ஆண்டின் மிகையில் சீராக்க முடியாது இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஏ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்பு மீதியில் கணிப்பீடு செய்யப்படாத செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஆன காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது ஆண்டின் மிகைக்காக நூலக புத்தக இருப்பில் ஆண்டில் வேறுபாடான ரூபா 597,517 பெறுமதி மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது.	பொருள் மெய்மையாய்வின் பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மற்றும் பட்டோலை அறிக்கையின் பிரகாரம் 08 கணக்கு விடயங்களுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 28,870,283 வேறுபாடு காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நேரொத்த அறிக்கை பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரி செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட LG 13 செலவின அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு குறிப்பு இலக்கம் 08 உடன் 06 செலவின விடயங்களுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 17,313,997 வேறுபாடு காணப்பட்டது.	மேற்படி	மேற்படி
(இ)	திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 544,798,339 ஆக இருந்த போதும் பரீட்சை மீதியில் அத் திகதியில் அந்தக் கணக்கின் மீதி ரூபா 543,678,142 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,120,197 வேறுபாடு காணப்பட்டது.	எதிர் வரும் கணக்கு கூற்றுக்களில் சரி செய்யப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 5(6)	குறித்துரைத்த காலப் பகுதியில் பிரதேச சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 75,540,106 ஆன சகல வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை சேகரிப்பதற்கு	சகல வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை குறித்துரைத்த கால எல்லையில் அறவிடுவதற்குத்	பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது.	
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 571	02 வருடங்களை விஞ்சிய 02 வைப்பு வகைகளுக்கு உரிய ரூபா 2,386,644 பெறுமதியான 28 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 756	2024 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தற்போது அமுல் படுத்தப்படுவதுடன் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,114,621 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,477,373 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவேற்றுதல் மற்றும் பொது சேவைகளை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்தப்படாமல் சபையினால் நிலையான வைப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 63,562,153 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	அந்தப் பணத்தை ஈடுபடுத்தி அபிவிருத்தி முன்மொழிவுகள் எதிர்காலத்தில் அமுல்படுத்துதவற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அபிவருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் பொது சேவைகளை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்துதல் வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	36,198,632	39,423,347	18,272,712	21,150,635	13,438,659	15,391,286	15,151,557	22,571,661
ii.	வாடகை	14,062,214	17,265,986	13,063,368	4,202,618	16,571,200	14,251,837	15,564,280	4,138,014
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	4,210,250	4,246,107	2,950,959	1,295,149	4,618,650	4,352,086	4,863,086	138,150
iv.	ஏனைய வருமானம்	45,246,923	48,906,953	-	48,906,953	31,854,111	34,772,413	19,168,431	33,498,332
	மொத்தம்	99,718,019	109,842,393	34,287,039	75,555,355	66,482,620	68,767,622	54,747,354	60,346,157

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) ஆதனவரி		
சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி அறவிடும் செயல் முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,150,635 ஆதனவரி நிலுவை காணப்பட்டதுடன் அது வருடாந்த சிட்டையிடலான ரூபா 39,423,347 இல் 54 சதவீதம் ஆகும்.	நிலுவையில் தற்போது 20 இலட்சம் அறவிடப்பட்டுள்ளதுடன் அறிக்கை தயாரித்து எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.	நடப்பாண்டு மற்றும் நிலுவை ஆதனவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) வாடகை		
(i) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் வாடகைக்கு வழங்கியதற்காக சொத்துக்களை	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள்	நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

	குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வாடகைக்கு வழங்குவதற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டி ரூபா 4,202,618 நிலுவை வாடகை அறவிடப் பட்டிருக்கவில்லை.	ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(ii)	சொத்துக்கள் வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 1,436,333 தொகை 01 – 14 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்**		
	வியாபார அனுமதிப் பத்திரம், வியாபார வரி, அறிவித்தல் பதாதை மற்றும் கைத்தொழில் வரிகளுக்காக அறவிட வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 1,700,103 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**ஏனைய வருமானம்**		
(i)	சபைக்குரிய திறப்பணை, மாவத்த வெவ, கிரிகொல்லாகம மற்றும கட்டியாவ நீர் செயற்திட்டங்களில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 2,582,904 அறவிடப்பட்டிருக்க வில்லை.	நீர்க் கட்டணம் செலுத்துதலைப் புறக்கணித்ததன் காரணமாக இணைப்பினை துண்டித்த பிரிவுகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 40,869,972 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,036,981 அறவிடப்பட்டிருக்க வில்லை.	03 சந்தரப்பங்களின் போது அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நீதிமன்றத் தண்டப்பணம் அனுப்பப்படாது இருந்ததுடன் மீண்டும் நினைவூட்டல் அனுப்பி அறவிடலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச சபை மற்றும் மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மிகுதியாக உள்ள உபவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உபவிதிகளை விதித்துக் கொள்வற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குரிய கெப் வண்டி 2019 ஏப்ரல் 15 ஆந் திகதி விபத்து உட்பட்டிருந்ததுடன் நட்டத்தின் தற்போதய மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 7,294,716 தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.	கெப் வண்டியின் சாரதியிடம் இருந்து உரிய தொகையில் 10 சதவீதம் அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகை முன்னாள் தலைவரிடம் இருந்து அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 சனவரி 31 ஆந் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்த சபைக்குரிய டிப்பர் வண்டிக்காக காப்புறுதி உரித்து ஒன்று கிடைத்த தொகைக்கு மேலதிகமாக சபையினால் செலவிடப்பட்ட ரூபா 113,176 தொகையை பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு அறவிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை அறவிடுதல் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	பொறுப்பு வாய்நத தரப்பினருக்காக முறையான விசாரணையை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபை கட்டிடத்தை மேல் கூரைக்காக சில சிலப் (Slab) பகுதி மழை நாட்களின் போது தண்ணீரால் நிரம்புகின்றமையினால் மற்றும் அந்த நீர் கீழ் மாடிக்கு பல வருட காலம் முதல் கசிவடைந்து சென்றிருந்த போதும் அதற்காக தீர்வினை வழங்குவதற்கும் தேவையான எந்த ஒரு நடவடிக்கையும் அதிகாரத் தரப்பினர் எடுக்காது இருந்ததுடன் அந்த கட்டிடத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் பாதுகாப்பிற்கும் ஆபத்தாக இருந்தது.	மேல் மாடி நிர்மாணிப்பதற்காக எடுக்கப்பட்ட தர கட்டுப்பாட்டுப் பொறியியலாளர் அறிக்கையின் பிரகாரம் நிர்மாணிப்பதற்கு பொருத்தமான நிலையில் காணப்படுகின்றமையினால் பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபையின் கட்டிடத்தை பழுது பார்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2018 ஆம் ஆண்டு முதல் 2023 இற்கு இடையிலான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற வேலை பூர்த்தி செய்யப்பட்ட 21 வேலைகளுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 2,569,617 ஆன நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்படுவதுடன் இதற்கு உரிய விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேலைகளில் குறைபாடுகளைப் பரீட்சித்து நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பிரதேச சபைக்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 179,206,814 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்து மீதிகளுக்காக போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உறுதிப்படுத்துகின்ற கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2013 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 746,964 ஆன 07 ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
இரண்டாம் நிலையின் பதவியான வேலைக் கட்டுப்பாட்டாளர் - III பதவிக்காக சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்காத வகையில் நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்பட்டு நிரந்தர நியமணம் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு 2024 யூன் 11 ஆந் திகதி முதல் 2025 ஏப்ரல் வரைக்க இடையிலான காலத்தில் கூட்டுப் பெறுமதியாக பெறுமதி ரூபா 578,204 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.	மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது.	சேவைப் பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குச் சொந்தமான செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற 07 வாகனங்கள் பிரதேச சபை வளவில் துருப்பிடிக்கும் நிலையில் விளைவற்றுக் காணப்பட்டது.	பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் உரித்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	ரூபா 09 மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட தமுத்தேகம வாராந்த சந்தைக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.	தமுத்தேகம நகர அபிவிருத்தித் திட்டத்தின் காரணமாக அது தற்காலிகமாக நிறுத்துமாறு வியாபார மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சரினால் வாய் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.	விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2022 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 08 நடமாடும் கடைகள் தலாவ சபை வளவிலும், மேலும் 08 கடைகள் தமுத்தேகம வளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது.	16 கடைகளுக்காக விண்ணப்பித்த 58 பேர்கள் இருக்கின்றமையால் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் பொருத்தமானவர்களை தெரிவு செய்து நடமாடும் கடைகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாகாண விசேட அபிவிருத்தி மாணியத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,437,515 ஆன 02 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கையேற்ற சங்கத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றாமையின் காரணமாக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நலன்கள் பெற்றுக் கொள்ளல் இழக்கப்பட்டிருந்தது.	சில சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்ட போதும் செயற்திட்டம் அமுல்படுத்தாமையின் காரணமாக உரிய உடன்படிக்கை செய்த சங்கம் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான ஒப்பந்தகாரர் மாத்திரம் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 பதவிகளுக்கு உரிய 12 உத்தியோகத்தர்களின் மிகையும், 08 பதவிகளுக்கு உரிய 12 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் காணப்பட்டது.	2024 ஏப்ரல் 11 ஆந் திகதி நிரந்தர நியமனம் கையளிக்கப்பட்ட பின்னர் மிகை ஏற்பட்டிருந்தது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கட்டமைப்பில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச சபைக்கு உரிய 22 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை அல்லது வரைவு ஒன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு உரிய கழிவுப் பொருள் கூறிடல் இயந்திரம் காணப்படாமையின் காரணமாக விரைவாக உக்காத கழிவுப் பொரள் இருப்பு நிலைய வளவில் கணிசமான பிரசேத்தில் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் சபை அங்கீகாரத்தின் பின் கழிவுப் பொருள் கூறிடல் இயந்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையான மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது.	குறைபாடுகளைத் தயாரித்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.